**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள் சனிக்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 508/2018** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பாண்டுரங்கன் | **வயது** | : | 80 |
| **த.பெ** | : | மொட்டைய கவுண்டர் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | மண்டகொளத்தூர்<br>தற்போது அரியாங்குப்பம் | **தொழில்** | : | வேலை எதுவும் செய்யவில்லை. |

**<u>20.09.2025 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1) நான் தற்போது அரியாங்குப்பத்தில் தான் வசித்துவருகிறேன். நான் ஏற்கனவே எனது முதல்விசாரணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கையெழுத்துபோடுவேனா என்றால் போடமுடியாது, நிதானம் தெரியாது. நான் நீதிமன்றத்தில் கையெழுத்து எதுவும் போடவில்லை. முதல்விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய கையெழுத்து உள்ளதா என்றால் எனக்கு கண் தெரியவில்லை. என் மீது யார்மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் மணி என்பவர் தாக்கல் செய்துள்ளார், என் மீது 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளார். ஒரு வழக்கில் நான் பிரதிவாதியாகவும் மற்ற இன்னொரு வழக்கில் (ஒ.எஸ்.124/2018) என் மகன்கள் பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான்.

2) சேட்டு, வெங்கடேசன் மற்றும் கண்ணன் என்னுடைய மகன்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பம்புசெட் சர்வீஸ் நெம்பர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை, தெரியாது. மேற்படி சர்வீஸிலுள்ள மோட்டார் ஆனது 5 எச்பியாஅல்லது 3 எச்பியா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் நான் யாரிடம் கிரையம் வாங்கினேன் என்றால் போளூரிலுள்ள கிருஷ்ணமூர்த்தியிடம் கிரையம் வாங்கினேன். மேற்படி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழ்ககு சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினாரக்ள் என்றால் எனக்கு தெரியாது. என் சொந்த ஊர் அரியாங்குப்பம் வசிப்பது மண்டகொளத்தூர். நான் அரியாங்குப்பத்திலிருந்து வந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

3) நான் கிரையம் பெற்ற வழக்கு சொத்தானது ஆதியில் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்திலுள்ள சர்வீஸ் நெம்பர்யார் பெயரிலுள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது, நான் தான் அனுபவிக்கிறேன். மேற்படி சர்வீஸ் நெம்பர் கிருஷ்ணமூர்த்திபெயரில் தான் உள்ளது என்றால் இல்லை என் பெயரில்தான் உள்ளது. கிருஷ்ணமூர்த்திக்கு முன்னர் சர்வீஸ் கனெக்சன் யார் பெயரிலிருந்தது என்றால் எனக்கு

தெரியாது. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரணம் மற்றும் யாரிடம் கிரையம் பெற்றார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

4) கிருஷ்ணமூர்த்தி கிரையம் பெற்றதை நான் அவரின் பத்திரங்களை பார்த்து பரிசீலனை செய்து வாங்கவில்லை என்றால் அவர் என்னிடம் பத்திரத்தை காண்பித்தார் நான் சரிபார்த்து தான் வழக்கு சொத்தை வாங்கினேன். அவர் பேரில் பட்டா, சிட்டா எவ்வளவு இருந்தது என்றால் 2 ஏக்கர் அவர்பேரில் பட்டா இருந்தது. கிருஷ்ணமூர்த்தி பெயரிலுள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மணி என்பவர் 508/2018 வழக்கு சொத்தின் சர்வீஸ நெம்பர் அவருக்கு தான் சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மற்றொரு வழக்கான 124/2018 ல் வாதி அந்த வழக்கின் சொத்தில் 62 செண்டிற்கு உரிமைகேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5) நான் போட்ட எதிர்வழக்குரையிலும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு வழக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று நான் கூறவில்லை என்றால் இல்லை அதலாம் எனக்கு தெரியாது, கிருஷ்ணமூர்த்தி எப்படி வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நான் முதலில் வாங்கினேனா மணி முதலில் வாங்கினாரா என்றால் நான் இரண்டாவதாக வழக்கு சொத்தை வாங்கினேன், மணி முதலில் வாங்கினார். நான் கிரையம் வாங்கும்போது வாதிதான் பம்புசெட்டை அனுபவித்து வந்தார் என்றால் இல்லை.

6) நான் என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் 2 வது பத்தியில் முதல் பக்கத்தில் கூறியுள்ள சங்கதிகள் ( **வாதி வழக்கறிஞர் படித்துகாண்பித்தார் சாட்சி எனக்கு எதுவும் கேட்கவில்லை என்று கூறியுள்ளார்) (மேலும், பிரதிவாதி வழக்கறிஞர் மறுமுறை சாட்சியிடம் கேட்க கூறினார் அதற்கு வாதி வழக்கறிஞர் சாட்சியிடம் படித்துகாண்பிக்கவா எ்னறு கேட்டார் அதற்கு அவர் நீங்கள் படித்தால் எனக்கு கேட்கவா போகிறது என்று பதில் கூறினார், பிரதிவாதி வழக்கறிஞர் மேற்படி சங்கதியை பதிவு செய்வதற்கு கடும்ஆட்சேபணை தெரிவித்தார்) (வாதி வழக்கறிஞர் மீண்டும் 2 வது பத்தியை படித்து காண்பித்தார் சாட்சி மறுபடிவயும் கேட்கவில்லை என்று பதில் கூறுகிறார்.)**

7) கிருஷ்ணமூர்த்தி யார் என்றால் எனக்கு கிரையம்கொடுத்தவர். கிருஷ்ணமூர்த்தி என்பவர் கணண் கவுண்டர் வகையாறாவிடம் கிரையம் பெற்றார் என்று நான் முதல்விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ணமூர்த்தி கண்ண கவுண்டர் அவர்களிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றார் என்பதற்கு நான் பத்திரம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்றசொத்தும், மணி கிரையம் வாங்கிய சொத்தும் அல்ராஜ் மந்திரி மற்றும் அவர் மனைவி தனமதி ஆகியோருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அல்ராஜ் மனைவி தனமதி அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 30 செண்ட் நிலத்தினை 10.06.1987 ல் இந்த வழக்கு சொத்திலுள்ள கிணற்றில் மின்இணைப்பு பெறுவதற்காக ஒரு மாணிக்க கவுண்டருக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

8) அல்ராஜ் மந்திரிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல்செய்துள்ள முதல் விசாரணையில் 3 ம் பத்தியில் **பி.சா.ஆ-3** முன்னிலைக்கு அதாவது லேட்

அல்ராஜ் என்பவரின் மகன்களில் ஒருவரான ஏழுமலை என்பவரிடமிருந்து அவருக்கு ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டு தனி சுவாதீனம் ஆனபிறகு மேற்படி ஏழுமலையின் சுயமுயற்சினாலும், சம்பாதியத்தாலும் பெற்ற எஸ்.சி நெம்பர் 84 ஆகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. மேலும் முதல்விசாரணை 5ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள முதல் 5 வரிகள் (படித்துகாண்பிக்கப்பட்டது அதற்கு சாட்சி அதெல்லாம் எனக்கு தெரியாது என்று பதில்அளித்தார்)

9) முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் தாக்கல் செய்துள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது. மணி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கரெண்ட் கேஸ் போட்டுள்ளார், சொத்து கேஸ் போட்டுள்ளார் அனைத்தும் பொய், அனுபவித்து வருவது நான். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு உரிமை இல்லாத சொத்தை நான் கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் நான் பத்திரத்தை பார்த்து தான் கிரையம்பெற்றேன். நான் கிருஷ்ணமூர்த்தி பேரில் உள்ள மின்அட்டை தான் தாக்கல் செய்துள்ளேன், ஆகையால் என் பெயரில் உள்ளது என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் யார் என்று எனக்கு தெரியாது. ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் அவர்கள் பற்றி நான் என் முதல்விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அல்ராஜ் அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் எனக்கு தெரியாது.

10) அல்ராஜிக்கு நாராணசாமி, கிருஷ்ணன், ஏழுமலை, கண்ணன் ஆகிய 4 மகன்கள் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நாராயணசாமி அவர்களின் பையன் தான் ராஜேந்திரன் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. நாராயணசாமி மகன் ராஜேந்திரனும், கிருஷ்ணனும் அவர்களுக்கு உரியசொத்தை வாதி மணிக்கு கிரையம்கொடுப்பதற்காக உடன்படிக்கை போடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ணன் அவர்கள் மாற்றுதிறனாளி என்பதால் திருமணம் எதுவும் செய்துகொள்ளாமல் ராஜேந்திரன் உடனிருந்து இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. ராஜேந்திரன் தந்தை இல்லாத மகன் என்பதால் கிருஷ்ணன் அவரை தத்தெடுத்து வளர்த்தார் என்றால் எனக்கு தெரியாது.

11) ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிருஷ்ணன் இறந்தபிறகு இருபாக சொத்துக்களையும் வாதிக்கு கிரையம் கொடுதத்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. சரோஜா அவர்களுக்கு நிலம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ணமூர்த்திக்கு உரிமை இல்லாத சொத்தை எனக்கு கிரையம்கொடுத்துவிட்டார் என்றால் நான் பத்திரம் பார்த்து தான் கிரையம் பெற்றேன். வழக்கு சொத்தில் வாதிக்கு 1 ஏக்கர் 62 செண்ட் சொந்தம் என்றால் நான் 2 ஏக்கர் 25 செண்ட் கிரையம் பெற்றுள்ளேன். நான் தப்பாக கிரையம் பெற்றுவிட்டு நானும் என் மகன்களும் வாதியிடம் பிரச்சனை செய்கிறோம் என்றால் அதெல்லாம் கிடையாது.

12) எனக்கும், மணிக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் தான் மணி வழக்குதாக்கல்செய்துள்ளார் என்றால் அவர் வந்தார், கேஸ் போட்டார் அது பொய் வழக்கு. குடும்பத்தில் எழுமலை மூத்தவர் என்பதால் அவர்பேரில் சர்வீஸ்கனெக்சன் பெற்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. சர்வீஸ் கனெக்சனில் பிரதிபாகம் வாதிக்கு உரிமையானது என்றால் தெரியாது, நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் எந்த சர்வே நெம்பரில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கிரையம் பெற்றுள்ளேன்

என்ற விவரத்தை என்னால் கூறமுடியுமா என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து நான் கிரையம் பெற்ற ஆவணத்தை மட்டும்தான் இந்தநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன், வேறு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்ய்வில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் முதல் பிரமாண வாக்குமூலத்தில் யார் கூறி கையெழுத்துபோட்டேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை, தெரியவில்லை. நான் இந்த வழக்கை காலதாமதம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் தான் இத்தனை வருடம் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் எனக்கு தெரியாது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.B.Salma,
District Munsif,
Polur.